**வெங்காய ஏற்றுமதிக்குத் தடை**

First Published : 21 Dec 2010 03:42:49 AM IST



புது தில்லி, டிச. 20: ஜனவரி 15-ம் தேதி வரை வெங்காய ஏற்றுமதிக்கு தாற்காலிகமாக தடை விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு கிலோ வெங்காயம் ரூ.30-க்கு விற்கப்பட்ட நிலையில் கிடுகிடுவென விலை உயர்ந்து இப்போது ரூ.60 முதல் ரூ.70 வரை விற்கப்படுகிறது.

கடும் தட்டுப்பாடு நிலவுவதால் நாடு முழுவதும் வெங்காயம் விலை உயர்ந்திருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தேசிய விவசாய கூட்டுறவு, சந்தை கூட்டமைப்பு சார்பில் தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், புதிதாக வெங்காய ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது.

ஏற்கெனவே அனுமதி பெற்ற நிறுவனங்கள் ஏற்றுமதியை மேற்கொள்ள முடியாத வகையில் குறைந்தபட்ச வெங்காய விலை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

விலை கணிசமாக உயர்த்தப்பட்டிருப்பதால் ஏற்றுமதி நடைபெறாது என்றும், ஜனவரி 15 வரை புதிதாக வெங்காய ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்படாது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**தலையங்கம்: வெங்காய நியாயம்!**

First Published : 21 Dec 2010 04:01:24 AM IST

வெங்காயத்தின் விலை கடந்த சில தினங்களாக கிலோ ரூ.60 முதல் 70 வரை உயர்ந்து மக்கள் மத்தியில் அதைப் பற்றிய பேச்சு எழுந்தவுடன், தேசிய வேளாண் கூட்டுறவுத் தொழில்கள்

சம்மேளனம் (நாபெட்) உடனடியாக வெங்காய ஏற்றுமதியைத் தடைசெய்து அறிவித்துள்ளது. அதாவது ஜனவரி 15-ம் தேதி வரை யாரும் வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாது. அப்படிச் செய்வதானால் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை ஒரு டன்னுக்கு 1200 அமெரிக்க டாலராக இருந்தால்தான் அனுமதி என்றும் கூறியுள்ளது.

இந்த நடவடிக்கையை ஏதோ திறமையான செயலாக எண்ணி வியக்க முடியவில்லை. காரணம், வெங்காய ஏற்றுமதிக்கும் உள்ளூர் விலை உயர்வுக்கும் எந்த நாளிலும் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை. இந்த நடவடிக்கை, ஒட்டகத்தின் முதுகிலிருந்து ஒரு துரும்பை எடுத்து அதன் கண்ணெதிரில் கீழே போட்டு, ஒட்டகத்துக்கு எடை குறைக்கப்பட்ட மனநிறைவைத் தரும் செயலே தவிர, அரசின் இந்த நடவடிக்கையால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை.

மூன்று மாதங்களுக்கு முன்பு இதேபோன்று வெங்காயத்தின் விலை உயர்ந்து இருந்தபோது, நவம்பர் மாதம் இதே நாபெட் ஏற்றுமதிக்கான வெங்காயத்தின் குறைந்தபட்ச விலையாக இருந்த 375 டாலரை, ஒரு டன்னுக்கு 525 டாலர் என்று உயர்த்தியது. ஏற்றுமதியைத் தடைசெய்வதால் அல்லது கட்டுப்படுத்துவதால் ஏதாகிலும் பயன் விளைந்திருக்க வேண்டுமென்றால், அப்போதே அதன் பலன் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், நடைமுறையில் உள்நாட்டுச் சந்தையில் அது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந்தியாவில் உற்பத்தியாகும் வெங்காயத்தின் அளவில் 10 விழுக்காடு மட்டுமே மலேசியா, வங்கதேசம், சிங்கப்பூர், மத்திய கிழக்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதிக்கான வெங்காயத்தின் தரமும் நமது உள்ளூர்ச் சந்தையில் கிடைக்கும் வெங்காயத்தின் தரமும் ஒன்றல்ல. ஏற்றுமதிக்கான வெங்காயத்தின் அளவு குறைந்தது 6 செ.மீ. அகலம் இருக்க வேண்டும். எல்லா வெங்காயமும் ஒரே சீரான நிறம், அளவில் இருக்க வேண்டும். இந்த வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படாமல் உள்நாட்டுச் சந்தைக்கு திருப்பப்பட்டாலும்கூட, இதன் தரம் கருதி உள்நாட்டுச் சந்தையில் இதன் விலை கிலோ ரூ.70 ஆகத்தான் இருக்குமே தவிர, குறைவாக இருக்க வாய்ப்பே இல்லை.

தற்போது வெங்காயத்துக்கு இந்த விலை உயர்வு ஏற்பட மூன்று காரணங்களைச் சொல்லலாம். முதலாவதாக, உற்பத்தி குறைந்துள்ளது. 2008-09-ம் ஆண்டில் 13.5 மில்லியன் டன்னாக இருந்த வெங்காய உற்பத்தி, கடந்த 2009-10-ம் நிதியாண்டில் 12.17 மில்லியன் டன்னாகக் குறைந்துவிட்டது. காரணம், வெங்காய சாகுபடிப் பரப்பு குறைந்துவிட்டது என்பதுதான்.

ஏற்றுமதிக்கான வெங்காயம், உள்ளூர்த் தேவைக்கான வெங்காயம் இரண்டுக்கும் தேவைப்படும் அளவுக்குச் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கச் செய்வதிலும், சாகுபடி செய்ய ஊக்குவிப்பதிலும் கடந்த (ஏப்ரல் மாதம் முதலாகவே) 9 மாதங்களில் அரசு நடவடிக்கை எடுத்திருந்தால், வெங்காயத் தட்டுப்பாடு இல்லாமல் செய்திருக்க முடியும். செய்யத் தவறிவிட்டது.

இரண்டாவதாக, அண்மையில் பெய்த மழையும் ஒரு காரணம். ஏற்கெனவே சாகுபடிப் பரப்பும் உற்பத்தியும் குறைந்திருக்கும் வேளையில், மழையால் வெங்காய சாகுபடி மட்டுமன்றி, லாரிகளில்

வந்த வெங்காயமும்கூட அழுகியதால், அந்தப் பொருளிழப்பை ஈடுசெய்ய வியாபாரிகள் விலையை உயர்த்துகிறார்கள். தட்டுப்பாடு விலை உயர்வுக்கு வழிகோலத்தானே செய்யும்.

அரசு ஊழியரின் சம்பள உயர்வு அறிவிப்பு வந்ததும் எல்லோருக்கும் வீட்டுவாடகை உயர்வதைப்போல பெட்ரோல் விலை உயர்வைக் காரணம் காட்டி, லாரி அதிபர்கள் வாடகையை உயர்த்தியுள்ளனர்.

வெங்காயத்தை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடைவிதித்தவுடன் அதே வியாபாரிகள் இப்போது வெங்காயத்தை பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யத் தொடங்கி விட்டார்கள். முதல்கட்டமாக 13 டிரக்குகளில் சுமார் 1,000 டன்னுக்கும் அதிகமான வெங்காயம் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு - குறிப்பாக தில்லிக்கு - வந்து சேரவிருக்கிறது. சுங்கவரி உள்பட இந்த வெங்காயத்தின் அடக்கவிலை கிலோ ரூ.18 மட்டுமே என்று சொல்லப்படுகிறது. ஆகவே, மீண்டும் கிலோ ரூ.30க்கு தில்லி காய்கறிச் சந்தையில் வெங்காயம் கிடைப்பது திண்ணம்.

நம்முடைய கேள்வி இதுதான் - பாகிஸ்தானில் இவ்வளவு மலிவான விலையில் வெங்காயம் கிடைக்கும் என்றால், அதை ஏன் முன்னதாகவே இறக்குமதி செய்து, சந்தையில் வெங்காயத்தின் விலை உயராமல் இருக்கும்படி அரசு செய்திருக்கக் கூடாது? மக்கள் மீது உண்மையாகவே அக்கறை இருக்கும் என்றால் இதைத்தானே அரசு செய்திருக்க வேண்டும். இதையும் வியாபாரிகள் தான் தங்கள் லாபத்துக்காகச் செய்ய வேண்டுமா? நாபெட் ஏன் இதில் முனைப்புக் காட்டியிருக்கக் கூடாது?

வெங்காயத்தில் இப்படியான நிலைப்பாடு என்றால், சர்க்கரையில் இதற்கு நேர்மாறான நிலைப்பாட்டை அல்லவா இந்திய அரசு எடுக்கிறது.

தீபாவளி நேரத்தில் சர்க்கரை ஏற்றுமதியை அனுமதிக்காதீர்கள். உள்நாட்டில் சர்க்கரை விலை உயரும் என்று எல்லோரும் சொல்லியாகிவிட்டது. ஆனால், செப்டம்பரில் 2.5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. கேட்டால், இந்தியாவில் நடப்பாண்டு 25 மில்லியன் டன் உற்பத்தி சர்க்கரை கிடைக்கும். மேலும் கடந்த ஆண்டு இருப்பு 50 லட்சம் டன். ஆகையால் இந்த ஏற்றுமதியால் விலை உயராது என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத்பவார் கூறினார். ஆனாலும் தீபாவளி நேரத்தில் சர்க்கரையின் விலை கிலோ ரூ.35 வரை உயர்ந்தது.

இப்போதும்கூட 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். 2011 ஏப்ரல் மாதத்துக்குள்ளாக 10 லட்சம் டன் ஏற்றுமதி செய்ய வேண்டிய கடப்பாடு இருக்கிறது என்கிறது அரசு.

சர்க்கரை விலை உயரும் என்றால் ஏற்றுமதியைத் தடைசெய்ய மாட்டார்களாம். வெங்காய ஏற்றுமதியைத் தடை செய்தாலும் பெரிய மாற்றம் இருக்காது என்று தெரிந்திருந்தும் தடை செய்வார்களாம். இந்த நியாயத்தை என்னவென்று சொல்வது. என்ன நியாயமோ, வெங்காயம்.

**வீணாகும் பனைமரங்கள்!**

குமரி அனந்தன்

First Published : 21 Dec 2010 01:58:08 AM IST

இந்தியாவில் 8 கோடி பனைமரங்கள் நிற்கின்றன என்றும், அவற்றுள் தமிழ்நாட்டில் 5 கோடி இருப்பதாகவும் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு புள்ளிவிவரம் சொல்லிற்று. இப்போது நிச்சயமாக அவ்வளவு மரங்கள் இருக்கும் என்று கூற முடியாது. ஆனால், இருப்பவைகளையாவது முறையாகப் பயன்படுத்த வேண்டாமா? பனைமரத்தைப் பற்றி நாம் சாதாரணமாக நினைத்து விடுகிறோம். இதன் பயன்களும், முக்கியத்துவமும் ஏன் யாருக்கும் புரிவதில்லை.

÷தாலசாஸ்திரம் என்ற நூல் பனைமரத்தால் 801 பலன்கள் கிடைக்கின்றன என்று கூறுகிறது. எத்தகைய நிலத்திலும் வளரும் தன்மையுடையது பனை. மழை பெய்யும் காலத்தில் கிடைக்கும் நீரையும், தன்வேர்களால் நிலத்திலிருந்து உறிஞ்சும் நீரையும் கொண்டே பனைமரம் வாழ்கிறது. இதற்கென நீர் பாய்ச்சுவதோ, உரமிடுவதோ, பூச்சி மருந்து தெளிப்பதோ கிடையாது. இவ்வாறு இயற்கைதரும் அற்புத மரத்தைக் கற்பகத்தரு என்றே அழைத்தார்கள்.

பனம் பழச்சாற்றை வெயிலில் துணியில் பரப்பிக் காயவிட்டுத் துண்டுகளாக்கி "பனாட்டு' என்ற பெயரில் இனிப்புப் பண்டமாகச் சுவைத்திருக்கிறார்கள்.

தென்னையில் ஆண் மரம், பெண் மரம் என்று கிடையாது. பனையில் ஆண் பனை அலகுப்பனை என்றும், பெண் பனை பருவப்பனை என்றும் அழைக்கப்படுகிறது. பெண் பனையில் நுங்கு கிடைக்கிறது. இரண்டிலும் பதநீர் எடுக்க முடியும். ஆனால், பெண் பனையில் வரும் பாளைகளில் பதநீர் எடுத்தால் பிறகு நுங்கு கிடைக்காது, பனம் பழம் கிடைக்காது, பனை விதை கிடைக்காது.

பனங்கொட்டை மண்ணில் புதைக்கப்பட்டு கிழங்காகிறது, கிழங்கை எடுக்காமல் அப்படியே விட்டுவிட்டால் அது பனைமரமாகிவிடுகிறது. எனவே பெண் பனைகளைவிட ஆண் பனைகளில் பதநீர் எடுப்பதே நல்லது.

÷பதநீர், உடலுக்கு நலம் தருவது, பலம் தருவது. இரவு முதல் அதிகாலை வரை, விண்மீன்களும், நிலாக் கதிர்களும் ஒளிபாய்ச்சுகின்றன. காலை முதல் ஞாயிறு தன் கதிர்களால் குளிப்பாட்டுகிறது. தொழிலாளி பாளையைச் சீவிச் சுரக்கும் நீரில் கடல்வயிற்றுச் சிப்பியின் சுண்ணாம்பும் சேர்ந்து பதப்படுத்துகிறது.

÷இந்தப் பதநீரைக் குடித்தால் உடல் வெப்பமடையும் நேரத்தில் குளிர்ச்சியூட்டுகிறது. உடல் குளிர்ச்சியாயிருந்தால் வெப்பமூட்டுகிறது.

÷நரம்பும் சதையும் பழுதடைந்தால் இதயத்தின் செயல்பாடு முடங்கிப்போகும். இவ்வாறு நிகழ்ந்துவிடாமல் பதநீரிலுள்ள சுண்ணாம்புச் சத்து பாதுகாக்கிறது. பல்லும் எலும்பும் பதநீரால் உறுதிப்படுகின்றன.

÷பதநீரிலிருக்கும் இரும்புச் சத்து நரம்பு மண்டலத்துக்குச் செயலூக்கத்தை அளிப்பதோடு நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொடுக்கிறது.

÷பதநீரிலிருக்கும் தையமின் என்ற உயிர்ச்சத்து, மூளையைச் சுறுசுறுப்பாகச் செயல்பட வைக்கிறது. ரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது.

÷வைட்டமின் பி2 எனப்படும் "ரிபோபிளேவின்' என்கிற சத்து, குளுக்கோமா என்கிற கண்நோய் வராமல் தடுத்துப் பாதுகாக்கிறது. பதநீரிலிருக்கும் நியாசின் எனும் மூலக்கூறு மனத்தடுமாற்றம் வராமலும், வாய்ப்புண் வராமலும் காக்கிறது.

÷மண்ணில் எந்தவித முதலீடும் இல்லாமல், பராமரிப்பும் இல்லாமல், உரமிடுதல் நீர்பாய்ச்சுதல் என்று செலவே இல்லாமல் வளர்ந்து நிற்கும் மரங்களிலிருந்து இத்தனை நலன்களைத் தரும் பதநீரை நாம் எடுக்கிறோமா? எடுக்காமல் இருப்பது மடமை அல்லவா?

÷பனையைச் சார்ந்த காகமும் அமுதுண்ணும் - என்ற பழமொழியே தமிழ்நாட்டில் உண்டு.

÷பதநீரைக் கூழாக்கி சிரட்டையில் ஊற்றி எடுப்பதைக் கருப்பட்டி, கற்பகக்கட்டி என்கிறோம். பதநீரைப் பக்குவமாகக் காய்ச்சிக் கூழாக்கி சில நாள்களில் படிக வளர்ச்சிப்படி கற்கண்டாகத் தயாரிக்கலாம். இவையனைத்தும் அருமையான சக்தி படைத்தவை.

வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் சிறைசென்று தளர்ந்து மெலிந்துபோன ம.பொ.சி.யை அழைத்துக் கொண்டு ராஜாஜி, சென்னையிலிருந்த காந்தி மகானிடம் அழைத்துச் சென்று, ""இவர் பனை ஏறும் குலத்தைச் சேர்ந்தவர், ஆனால் கள்ளுக்குப் பரம எதிரி'' என்று அறிமுகப்படுத்தினார்.

காந்தி ஒட்டி உலர்ந்து மார்பு கூடுதட்டிப் போயிருந்த ம.பொ.சி.யைக்காட்டி ""இவர் பதநீர் குடித்தால் தேறிவிடுவார். நான் புளித்தகள்ளுக்கு எதிரி. இனிக்கும் பதநீருக்கு நண்பன். நான் கரும்புச் சீனி சாப்பிடுவதில்லை, இனிப்புக்குக் கருப்பட்டிதான் சாப்பிடுகிறேன்'' என்றார்.

குஜராத் மாநிலத்தில் பிறந்த அண்ணல் மகாத்மா காந்தியடிகளுக்குத் தெரிந்திருந்தது பனையின் பெருமை. பதநீரின் அருமை.

÷ஒரே ஒரு மாவட்டத்திலிருந்து நான் பெற்ற அதிகாரபூர்வமான புள்ளிவிவரத்தைத் தருகிறேன் . விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அன்புடன் எனது வேண்டுகோளை ஏற்றுத் தந்த தகவல்.

÷பருவமடைந்த 72,555 மரங்களில் மட்டுமே தொழிலாளர்கள் ஏறிஇறங்கிப் பயனைக் கொண்டு வருகிறார்கள். பருவமடைந்துவிட்டோம்; பதநீரும், நுங்கும் தருவதற்கு நாங்கள் தயாராய் இருந்தும் எங்களைப் பயன்படுத்துவாரில்லையே; உலக மக்களுக்கு நாங்கள் உதவ முடியவில்லையே என்று ஓலைக்கரங்களால் தங்கள் தலைகளில் அடித்துக் கொண்டு அழுது அரற்றும் மரங்கள் 14,22,099.

÷நாம் பயன்படுத்துவது ஒரு லட்சத்துக்கும் குறைவு. பயன்தரத் தயாராயிருந்தும் நாம் எடுத்துக் கொள்ளாத மரங்கள் 14 லட்சத்துக்கும் அதிகம். இது ஒரே ஒரு மாவட்டத்தில். அதுவும் சிறிய மாவட்டமாகிய விருதுநகரில்.

இவ்வாறாயின் தமிழகம் முழுவதும் உள்ள 32 மாவட்டங்களில் இவ்வாறு நாம் பயன்படுத்தாமல் நிற்கும் பனைமரங்கள் எவ்வளவு?

÷வீட்டுமுன் நின்றாலும், தோப்புத்துறவுகளில் நின்றாலும் சும்மாதானே பயனற்று நிற்கின்றன என்று 200, 300 ரூபாய்க்கும் வெட்டி விற்றுவிடுகிறார்கள். அவை செங்கல்சூளைகளில் விறகாகி எரிகின்றன. இந்நிலை தொடருமானால், வருங்காலச் சந்ததிகளுக்கு பனை மரங்களைப் படம் வரைந்துதான் காட்ட வேண்டிவரும்.

÷10 ஆண்டுகளுக்கு முன் லண்டன் சென்ற நான், அங்கிருந்து நுங்கு குழம்பு (நுங்கு ஜாம்), பனம்பழச்சாறு கொண்ட டப்பாக்களை வாங்கிவந்து தமிழக முதல்வர் கருணாநிதியிடம் காட்டினேன். அதிகாரிகளை அழைத்து இவைபோல் செய்யுங்கள் என்று ஆணையிட்டார். செய்தார்கள். மகிழ்ச்சி பொங்க அவற்றைச் சுற்றுலாப் பொருட்காட்சி நடக்கும் தீவுத்திடலில் காட்சிக்கும், விற்பனைக்கும் வைத்தேன். மக்கள் மகிழ்ச்சியோடு வாங்கிச் சென்றார்கள். அதோடு நின்றுவிட்டது.

இத்தனைக்கும் தமிழக முதல்வர் பனைத்தொழிலின் மீதும், தொழிலாளர்கள் மீதும் மிகுந்த அக்கறை கொண்டவராக இருக்கிறார். பனை ஏற உரிமம் பெறவும், நலவாரியத்தில் உறுப்பினராவதற்கும் விதித்திருந்த கட்டணங்களையே நீக்கிவிட்டார்.

நலவாரிய உறுப்பினர்கள் வருமான வரம்பு நிபந்தனைகளுக்கு உள்படாமல் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைப் பயன்படுத்த உரிமை அளித்துவிட்டார்.

அரசு சார்ந்த பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் தொழிலாளிகள் மரமேறி இறக்கிக் கொண்டுவரும் பதநீருக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.4 வீதம் வாங்குவது, உழைப்புக்கேற்ற வகையில் இல்லை; அதிக விலை கொடுக்க வேண்டும் என்று முறையிட்டதை ஏற்று இரண்டரை மடங்கு உயர்த்தி இப்போது லிட்டர் ரூ.10 வீதம் வாங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்.

இந்தக் கொள்முதல் தமிழகமெங்கும் நடைபெற வேண்டும்; அதற்குக் கணிசமாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும்.

ஒரு பனைமரத்தைச் சரியாகப் பயன்படுத்தினால், ரூ.3,000 வருமானம் கிடைக்கும். இப்போது தமிழகமெங்கும் தோராயமாக 3 கோடி பனைமரங்கள் நிற்பதாக வைத்துக்கொண்டால், ஆண்டொன்றுக்கு ரூ.9,000 கோடி வருமானம் பெறலாம்.

இந்த மரங்களில் ஏறி இறங்கப் போதுமான ஆள்கள் இல்லை. அனுபவசாலிகளைக் கொண்டு புதியவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். பயிற்சி அளிப்பவர்களுக்கும், பயிற்சி பெறுபவர்களுக்கும் போக்குவரத்துச் செலவு, உணவு, உறைவிடம் கொடுத்து ஊக்க ஊதியமும் கொடுக்க வேண்டும்.

நமக்கு முந்தைய தலைமுறை செய்த இந்த அற்புதப் பணியை நாமும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு புதியவர்களை உடல் உழைப்பாலேயே மரங்களில் ஏறிப் பயன் பெற ஒருபுறம் பயிற்சி அளிக்க வேண்டும்.

இன்னொருபுறம், பனை ஏறக் கருவியொன்று மிக அவசரமாகக் காண வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பு நெல்லை மாவட்டம் குட்டம் என்ற ஊரில் பசுபதி மார்த்தாண்டன் என்பவர் பனையில் பொருத்த சைக்கிள் மிதிப்பதுபோல் மிதித்து மேலே செல்லும் கருவியொன்றைக் கண்டுபிடித்தார். அம் முயற்சி முழுமை பெறும் முன் அவர் மறைந்துவிட்டார்.

இப்போது கோபிச்செட்டிபாளையம், கோயமுத்தூர் போன்ற இடங்களில் சிலர் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களுக்கும் எல்லாவிதமான ஊக்கமும் நாம் கொடுக்க வேண்டும்.

கோவை வேளாண் பல்கலைக்கழகம் வடிவமைத்துக் கொண்டிருக்கும் கருவியை நான் இருமுறை நேரில் சென்று காணும் வாய்ப்பைத் தந்தார்கள். தொடர்ந்து அக் கருவியை மேம்படுத்த முயன்று கொண்டிருக்கிறார்கள்.

கனமற்ற - ஆனால் உறுதியான - உலோகத்தால் இதைச் செய்ய வேண்டும். ஒருவர் தூக்கிச் செல்லும் எடைதான் இருக்க வேண்டும். சக்கரங்களைப் பொருத்தி பனந்தோப்பில் இழுத்துச் செல்லும் வகையிலும் அமைக்கலாம்.

மிக எளிதில் பொருத்த, பயன்படுத்திக் கழற்றி அடுத்த மரத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில் ஒரு கருவியை நம்மால் செய்ய முடியும் என்று தொழில்நுட்ப வல்லுநர்கள் இதை ஒரு சவாலாக ஏற்க வேண்டும்.

இவ்வாறு செய்யும் கருவிகளை ஆய்வுசெய்து தேர்வு செய்யப்படுவனவற்றுக்கு நல்ல பரிசுகளை அரசும், தொண்டுள்ளம் கொண்ட அறக்கட்டளைகளும் கொடுக்கலாம்.

இத்தகைய கருவிகள் பரவலாகச் செய்யப்பட்டால் பலர் பயிற்சி பெற வருவர்; மக்கள் பனை மரங்கள் மூலம் பலன் பல பெறுவர்.

இப்போது குளிர்பானம் மற்றும் சோடா விற்கும் கடைகளிலெல்லாம் பதநீர் கிடைக்க வேண்டும். அரசும் பனை வளர்ச்சி வாரியமும், தொழிலாளர் நல வாரியமும், சம்மேளனங்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் இதை தேசபக்தியோடு அணுகி, நாட்டுத் தொண்டெனக் கருதிச் செயலில் முனைய வேண்டும்.

ஆம், மண்ணின் மரத்தில் கிடைக்கும் அமுது பதநீர். சிறுகடைகளிலும் கிடைக்கும் வகையில் பதநீரைக் கொடுப்போம். இப்போது விஞ்ஞான முறையில் பக்குவப்படுத்த 20 நாள்களுக்கு மேலாகவும் பதநீரைக் கெட்டுப் போகாமல் வைத்திருக்கும் காகித டப்பாக்கள் கிடைக்கின்றன. அவற்றையும் குப்பிகளையும் பயன்படுத்தி, பதநீரை எங்கும் விநியோகிப்போம்.

பெட்டிக்கடைகள் முதல் பெரிய விடுதிகள் வரை பதநீர் கிடைக்க வழி காண்போம். இதைப் பதப்படுத்தி, ஏற்றுமதிக்கு வழிகோலினால் தமிழகம் செழிக்கும். தமிழகக் கிராமப் பொருளாதாரம்

மிகப்பெரிய மாற்றங்களைக் காண முடியும். வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்து கொண்டிருக்கிறோமே என்பதை இனியும் உணராமல் இருந்தால் எப்படி?

**விவசாயிகளுக்கு ஒட்டுரக மக்காச்சோள விதைகள் வழங்கல்**

First Published : 20 Dec 2010 10:36:49 AM IST

தேனி, டிச. 19: தேனி அருகே உள்ள காமாட்சிபுரத்தில் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் வாகரை மக்காச்சோளம் ஆராய்ச்சி மையம் சார்பில் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு ரக மக்காச்சோள விதைகள் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட விவசாயத் துணை இயக்குநர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். ஆராய்ச்சி நிலைய தலைவர் ரவிகேசவன் முன்னிலை வகித்தார்.

மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்பம், பயிர்களுக்கு நுண்ணூட்ட சத்துகள் அளிப்பதன் அவசியம் ஆகியவை குறித்து சென்ட்க்ட் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து, சின்னமனூர் விவசாய உதவி இயக்குநர் சையது முகமது நஹீப் ஆகியோர் பேசினர்.

ரங்கநாதபுரம், குப்பிநாயக்கன்பட்டி, ரங்கசமுத்திரம், நாச்சியார்புரம், கருப்பத்தேவன்பட்டி, அழகாபுரி, தர்மாபுரி, மூர்த்திநாயக்கன்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த 50 விவசாயிகளுக்கு கோ.எம்.எம் 5 வீரிய ஒட்டு ரக மக்காச்சோள விதைகள் வழங்கப்பட்டன. தொழில் நுட்ப உதவியாளர் சுருளிஆண்டவர் நன்றி கூறினார்.

**திருநாவலூர் வட்டாரத்தில் உளுந்து பயிர் ஆய்வு**

First Published : 20 Dec 2010 12:29:36 PM IST

உளுந்தூர்பேட்டை, டிச. 19: விழுப்புரம் மாவட்டம் திருநாவலூர் வட்டாரத்தில் பயறு பெருக்குத்திட்டத்தின் கீழ் 1250 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து பயிரினை வேளாண்துறை அதிகாரிகள் அண்மையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

சென்னை வேளாண் ஆலோசகர் சந்திரகுமார், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக ஆலோசகர் டாக்டர் ரவிச்சந்திரன், வேளாண்மை துணை இயக்குநர் கணேசன் ஆகியோர் கொண்ட குழுவினர் திருநாவலூர் வேளாண் வட்டாரத்தில் நேரில் ஆய்வு செய்தனர். பின்னர் விவசாயிகளிடம் பயிருக்கான இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், இனக்கவர்ச்சிப் பொறிகள் மானியப் பொருள்கள் முறையாக வழங்கப்படுகிறதா எனவும் கேட்டறிந்தனர்.

'ஒருங்கிணைந்த பண்ணை திட்டத்தில் கோழியுடன் மீன் வளர்ப்பு'

First Published : 20 Dec 2010 03:28:40 PM IST

புதுச்சேரி, டிச. 19: புதுச்சேரி வேளாண் அறிவியல் நிலையத்தில் ஒருங்கிணைந்த பண்ணை திட்டத்தின் கீழ் கோழியுடன் மீன் வளர்ப்பு முறை அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நமது நாட்டில் தொழிற்சாலைகள், நகரங்கள் விரிவடைந்து கொண்டிருப்பதாலும், விவசாய நிலங்களில் மனைப்பிரிவுகள் அதிகரிப்பதாலும், விவசாய நிலப்பரப்பு குறைந்து கொண்டே வருகிறது.

தனி நபருக்கு இருக்கக்கூடிய நிலப்பரப்பின் அளவும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. பெருகி வரும் மக்கள்தொகைக்கு தேவையான உணவு உற்பத்தி பற்றாக்குறையாக உள்ளது.

அதனால் குறுகிய நிலப்பரப்பில் அதிக உணவு உற்பத்தியும், வருவாயும் ஈட்ட வேண்டுமானால் ஒருங்கிணைந்த பண்ணை முறையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

பயிர் சாகுபடி, கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு ஆகிய வெவ்வேறு பண்ணை முறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், ஒரு பண்ணைக் கழிவு மற்றும் உப பொருள்கள் மற்றொரு பண்ணைக்கு இடுபொருளாக பயன்படுகிறது.

இவ்வாறு ஒன்றுக் கொன்று பயன்தரும் வகையில் உள்ளதால் இடுபொருள் செலவு குறைந்து, சிறிய அளவு நிலப்பரப்பில் அதிக உணவு உற்பத்தியும், வருவாயும் ஈட்ட வழி வகுக்கிறது.

இம்முறையில் கோழியுடன் மீன் வளர்ப்பை மேற்கொண்டு வருவாய் ஈட்டும் வழிவகையை விவசாய பெருமக்களுக்கு விளக்கும் வகையில், புதுச்சேரி குரும்பாப்பட்டில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் முதல்நிலை செயல் விளக்க திட்டத்தின் கீழ் கோழியுடன் மீன் வளர்ப்புக்கு ஆர்வமாக உள்ள வெவ்வேறு கிராமங்களைச் சேர்ந்த 8 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, தலா 1000 மீன் குஞ்சுகளும், 50 கோழிகளும் இடுபொருளாக வழங்கப்பட்டது.

வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் அ.ராமமூர்த்தி வழங்க, மணப்பட்டைச் சேர்ந்த விவசாயி கந்தப்பன் உள்ளிட்ட 8 விவசாயிகள் பெற்றுக் கொண்டனர்.

மீன்வள நிபுணர் வ.திருமூலன், கால்நடை மருத்துவர் பி.டி.சித்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

கோழியுடன் மீன் வளர்ப்பதால் கோழிகள் எச்சம் மீன்களுக்கு உணவாகவும், உரமாகவும் பயன்படுகிறது.

அதனால் மீன் வளர்ப்பில் அதிக செலவினமாகிய இடுபொருள் செலவு குறைந்து வருவாய் அதிகரிக்கிறது

**'வேளாண் உற்பத்தியில் முதலிடம் பெற வேண்டும்': ஆட்சியர்**

First Published : 20 Dec 2010 12:53:36 PM IST

ஈரோடு, டிச. 19: வேளாண் உற்பத்தியில் மாநில அளவில் முதலிடம் பெற, விவசாயிகளும், வேளாண் அலுவலர்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் தா.சவுண்டையா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

ராஜராஜன் 1000 நெல் சாகுபடி, சாதாரண நெல் சாகுபடி, உளுந்து மற்றும் பாசிப் பயறு சாகுபடியில், மாநில அளவில் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தித் திறனில் முதலிடம் பெறும் விவசாயி மற்றும் சிறப்பாக விவசாயிகளோடு தொடர்பு கொண்டுப் பணியாற்றும் வேளாண் அலுவலருக்கு, அறிஞர் அண்ணா விருது வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான விருது, குடியரசு தின விழாவின்போது வழங்கப்பட உள்ளது.

எனவே, ஈரோடு மாவட்ட விவசாயிகளும், வேளாண் அலுவலர்களும் இணைந்து செயல்பட்டு, உற்பத்தித் திறனில் மாநில அளவில் முதலிடம் பெறும் வகையில் செயல்பட வேண்டும் என்றார்.

**பாலகொலா கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம்**

First Published : 20 Dec 2010 01:02:45 PM IST

உதகை, டிச. 19: குன்னூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட பாலகொலா கிராமத்தில், உதகை கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. உதகை கால்நடை நோய் புலனாய்வுத் துறை உதவி இயக்குநர் லட்சுமணன், மேலூர் கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர் பொன்.கலைவாணி, கால்நடை ஆய்வாளர்கள் மகாலிங்கம், மகாதேவன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் ஜெய்குமார், ராமகிருஷ்ணன், ஆய்வக உதவியாளர் சந்திரன் உள்ளிட்டோர், ஆடு, மாடு, நாய், கோழி உள்ளிட்ட வளர்ப்புப் பிராணிகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

பாலகொலா ஊர் தலைவர் சொக்கலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற இம்முகாமில், கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், மலட்டுத்தன்மை நீக்கம், சினைப் பரிசோதனை, ஆண்மை நீக்கம், தடுப்பூசி போடுதல், செயற்கை முறை கருவூட்டல் மற்றும் இலவச நோய் பரிசோதனை செய்யப்பட்டன. மேலும், சிறந்த கறவைப் பசு மற்றும் கிடாரி தேர்வு செய்யப்பட்டு, ஊக்கப் பரிசு வழங்கப்பட்டன.

**முட்டை விலை**

First Published : 20 Dec 2010 11:45:51 AM IST

நாமக்கல், டிச.19: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.55, சென்னையில் ரூ. 2.60.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 55, முட்டைக் கோழி கிலோ ரூ. 32.

தினமலர்

**வேளாண் கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,23:21 IST

காங்கயம்: சிவன்மலை ஜேஸீஸ் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி சார்பில் நிலவளம் என்ற தலைப்பில் வேளாண் கருத்தரங்கு நடந்தது. பள்ளி முதல்வர் சாவித்திரி வரவேற்றார். தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். தாளாளர் பழனிசாமி முன்னிலை வகித்தார்.

சென்னிமலை தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராமசுப்ரமணியம், "மண்வளம் குறைவதற்கான காரணங் களும், அவற்றை மேம்படுத்தும் முறை' என்ற தலைப்பிலும், ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி பேராசிரியர் அனுராதா, "உணவும், ஊட்டச்சத்துகளும்' என்ற தலைப்பிலும் பேசினர்.

படியூர் பாசன விவசாய சங்க முன்னாள் தலைவர் சோமசுந்தரம், யோகாசன ஆசிரியர் காளிப்பன், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் பங்கேற்றனர். இளம் அறிவியல் ஆய்வுக்குழு வழிகாட்டி ஆசிரியர் சின்னதுரை நன்றி கூறினார்.

**நிலக்கடலை வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,23:22 IST

வெள்ளகோவில்: வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூட, ஏலத்துக்கு கடந்த வாரத்தைவிட குறைந்த அளவே நிலக்கடலை வந்தது. கடந்த வாரம் 42 மூட்டைகளாக இருந்த வரத்து, இவ்வாரம் 25 மூட்டைகளாக குறைந்தது. முதல் தரம் ரூ.38.59; இரண்டாம் தரம் ரூ.34.50 என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ஏழு விவசாயிகள் கொள்முதல் செய்தனர். ரூ.32 ஆயிரத்து 439க்கு வர்த்தகம் நடந்தது. வெள்ளகோவில் மற்றும் சுற்றுப்பகுதிகளில் அவ்வப்போது பெய்து வரும் மழையே, நிலைக்கடலை வரத்து குறைவதற்கு காரணம் என்றனர் விவசாயிகள்.
வாழைக்காய் வரத்து அதிகரிப்பு: அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த வாழைக்காய் ஏலத்துக்கு 10 ஆயிரம் தார் வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தைவிட 3,000 தார்கள் அதிகம். இந்த ஏலத்தில் நேந்திரன் ரகம் கிலோவுக்கு ரூ.13 முதல் ரூ.16 வரை, கதலி ரகம் ரூ.9 முதல் ரூ.12 வரை விலை போனது. 300 விவசாயிகள், 20 வியாபாரிகள் பங்கேற்றனர்; ரூ.8.75 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

**விதை பரிசோதனை ஆய்வகம் திருவள்ளூரில் துவக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,23:25 IST

திருவள்ளூர் : விதைகளின் தரத்தை அறிந்து கொள்ள வசதியாக, பரிசோதனை ஆய்வகம் திருவள்ளூரில் துவங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து திருவள்ளூர் மாவட்ட விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழக அரசின் விதை சான்று துறையின் கீழ், திருவள்ளூரில், புதிய விதை பரிசோதனை நிலையம் துவக்கப்பட்டு, முதல்கட்ட ஆயத்தப்பணிகள் முடிந்து தயார் நிலையில் உள்ளது. மாவட்ட விதை வினியோகஸ்தர்கள், விதை உற்பத்தியாளர்கள், விவசாயிகள் இந்த ஆய்வகத்தை அணுகி, தங்களிடம் உள்ள விதைகளின் தரத்தை பற்றிய முழுமையான விவரங்களை அறிந்து கொள்ளலாம். திருவள்ளூர், பெரியகுப்பம் பகுதியில் எண் 48, ஜே.என்.சாலையில் இந்த விதை பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. ஒரு விதை மாதிரிக்கு, 30 ரூபாய் வீதம் பரிசோதனை கட்டணம் வசூலிக்கப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காய்கறி விலை "கிடுகிடு' உயர்வு 50 சதவீதம் விற்பனை சரிவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,23:41 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி சந்தைக்கு பனி பொழிவு காரணமாக காய்கறி வரத்து குறைந்துள்ளதால், அனைத்து காய்கறிகளின் விலையும் மீண்டும் உயர்ந்து வருகிறது. இதனால், ஒரு மாதத்தில் 50 சதவீதம் காய்கறி விற்பனை சரிந்துள்ளது. பொள்ளாச்சி பகுதிக்கு அனைத்து காய்கறிகளும் 70 டன் வரை வரத்தாக இருக்கும். ஆனால், தற்போது 30 டன் மட்டுமே வரத்தாக உள்ளது. வரத்து குறைந்து வருவதால், காய்கறிகளின் விலை நாளுக்குநாள் உயர்ந்து வருகிறது. குறிப்பாக, பெல்லாரி வெங்காயம், சின்ன வெங்காயம், தக்காளி, கத்திரிக்காய் ஆகியவற்றின் விலை ஒரு மாதத்தில், 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. உள்ளூர் சந்தையிலேயே காய்கறிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால், கேரளா மற்றும் தமிழகத்தின் பிறப்பகுதிகளுக்கு காய்கறிகள் அனுப்புவது பாதிக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சியில், நேற்று ஒரு கிலோ பெல்லாரி வெங்காயம் - ரூ.55, சின்ன வெங்காயம் - ரூ.40, தக்காளி - ரூ.35, கத்திரிக்காய் - ரூ.50 என விலை போனது. இதனுடன் ஒப்பிடும் போது, இங்கிலீஷ் காய்கறிகளின் விலை அதிகபட்சமாக ஒரு கிலோ 25 ரூபாய் வரை விற்றது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், "பருவம் தவறிய மழை, பனி பொழிவு காரணமாக வட மாநிலத்திலிருந்து வெங்காய வரத்தும், தமிழகப்பகுதிகளிலிருந்து நாட்டு காய்கறிகளின் வரத்தும் எதிர்பாராதவிதமாக குறைந்துள்ளது. சீராக வரத்துள்ள நேரத்தில், அனைத்து காய்கறிகளின் வரத்தும் குறைந்துள்ளதான் விலையேற்றத்திற்கு காரணம். விலையேற்றத்தினால், காய்கறி விற்பனை ஒரு மாதத்தில் 50 சதவீதம் குறைந்துள்ளது. இன்னும் ஓரிரு வாரங்களுக்கு விலையில் பெரிய அளவில் மாற்றமில்லாமல், இதே விலை நீடிக்கும். அதன்பின், வரத்து பொறுத்து விலையில் ஏற்ற, இறக்கம் காணப்படும்' என்றனர்.

**கண்ணீருதான் வருது: ஒரு கிலோ பெரியவெங்காயம் 60 ரூபாய்:ஏழை, நடுத்தர குடும்பத்தினர் பரிதவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,23:33 IST

கோவையில், பெரியவெங்காயத்தின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து, கிலோ 60 ரூபாயை தொட்டுவிட்டது. தொடர்மழையால், மொத்த மார்க்கெட்களுக்கு வரத்து குறைந்து, விலை கடுமையாக எகிறியிருப்பதாக கூறும் வியாபாரிகள், வரும் நாட்களில் 70 ரூபாயை எட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கின்றனர்.கோவை நகர் மற்றும் சுற்றுப்பகுதி

மக்களின் காய்கறி தேவையை தியாகி குமரன் மார்க்கெட், மேட்டுப்பாளையம் ரோட்டிலுள்ள அண்ணா மார்க்கெட் மற்றும் பெரியார் மார்க்கெட் பூர்த்தி செய்கிறது. கோவை சுற்றுப்புற பகுதிகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் வரும் காய்கறிகள் மேற்கண்ட மார்க்கெட்களில் மொத்த விலையில் விற்கப்படுகின்றன.

இவற்றை வாங்கிச் செல்லும் சில்லரை வியாபாரிகள் லாபம் வைத்து மக்களுக்கு விற்கின்றனர்.கேரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் உள்ளிட்ட காய்கறிகள் ஊட்டியில் இருந்து மார்க்கெட்களுக்கு வருகின்றன. உருளைக்கிழங்கு பெரும்பாலும் மேட்டுப்பாளையத்திலுள்ள மண்டிகளில் இருந்து சப்ளையாகிறது. பெரியவெங்காயம் அதிகளவில் புனேயில் இருந்து கோவைக்கு வருகிறது. நாட்டுத்தக்காளி மற்றும் ஆப்பிள் தக்காளி கோவை புறநகர் பகுதிகள் மற்றும் கர்நாடகாவில் இருந்து வரவழைக்கப்படுகின்றன. பெரும்பாலான காய்கறிகளின் விலை சமீபகாலமாக ஏறுமுகத்திலேயே உள்ளன. குறிப்பாக, பெரியவெங்காயத்தின் விலை, வரலாறு காணாத அளவு எகிறியுள்ளது. மொத்த மார்க்கெட்டிலேயே கிலோ 56க்கு விற்கப்படுவதால், சில்லரை முறையில் இதன் விலை 60 ரூபாயாக அதிகரித்துள்ளது. கடந்த ஒன்றரை மாதமாக வடமாநிலங்களில் தொடர் மழைபொழிவு இருப்பதால், புனேயில் இருந்து பெரிய வெங்காயத்தின் வரத்து கோவையில் வெகுவாக குறைந்துவிட்டது. வழக்கமாக சப்ளையாகும் அளவில் 70 சதவீதம் குறைந்து 30 சதவீதம் வரை மட்டுமே வரத்து உள்ளது. இதனால், தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்ந்திருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.அதேபோன்று, தொடர் மழையால் தக்காளி வரத்தும் வெகுவாக குறைந்துவிட்டது. பெரும்பாலான விவசாய தோட்டங்களில் தக்காளி செடிகள் தண்ணீரில் மூழ்கி அழுகிவிட்டதால், மார்க்கெட்டுகளுக்கான வரத்தும் குறைந்துவிட்டது. மொத்த மார்க்கெட்டில் கிலோ 26 ரூபாய்க்கு வாங்கும் வியாபாரிகள், சில்லரை முறையில் கிலோ 30 ரூபாய்க்கு விற்கின்றனர். இதே போன்று, மற்ற காய்கறிகளின் விலையும் முன்பு ஏறியபடி உச்ச நிலையிலேயே உள்ளன. விலை உயர்வு காரணமாக அன்றாடம் வாங்கும் காய்கறிகளின் அளவை பெரும்பாலான மக்கள் குறைத்து கொண்டதால், விற்பனையும் சரிந்துவிட்டதாக புலம்புகின்றனர், வியாபாரிகள்.இதுகுறித்து, காய்கறி வியாபாரி தனபால் கூறியதாவது: காய்கறி விலை ஏறுமுகத்தில் இருப்பதால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வாங்கும் அளவை படிப்படியாக குறைத்துவிட்டனர். ஒரு குடும்பத்துக்கு சராசரியாக தினமும் முக்கால் கிலோ காய்கறிகளை வாங்கி வந்தவர்கள், தற்போது அரை கிலோ, கால் கிலோ அளவிலேயே வாங்குகின்றனர். இதனால், வியாபாரமும் சரிந்து விட்டது. மற்ற காய்கறிகளை காட்டிலும் பெரிய வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மொத்த மார்க்கெட்டில் கிலோ 56 ரூபாய் விலையில் 60 கிலோ கொண்ட பெரியவெங்காய மூட்டையை வாங்கி விற்கும் சில்லரை வியாபாரிக்கு அதிகபட்சமாக 240 ரூபாய் லாபம் கிடைக்கும். அதுவே இரண்டு, மூன்று நாட்களுக்கு விற்காமல்

இருப்பில் கிடந்தால் 10 கிலோ வரை அழுகிவிடுகிறது; இதனால் ஏற்படும் நஷ்டம் 560 ரூபாய். இந்த இழப்பை தாங்கிக் கொள்ள முடியாத வியாபாரிகள், தாங்கள் கொள்முதல் செய்யும் அளவை குறைத்துக்கொண்டனர். விலை உயர்வு காரணமாக, மக்களும் வாங்கும் அளவை குறைத்துக்கொண்டனர். தக்காளி விலை உயர்வுக்கு மழையே முக்கிய காரணம். கடந்த ஒன்றரை மாதமாக பொழிந்த தொடர் மழையால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. அறுவடைக்கு தயாரான நிலையில் செடியிலேயே தக்காளி பழங்கள் அழுகி வீணாகிவிட்டன.  பல விவசாய தோட்டங்களில் மழைநீர் தேங்கி செடிகள் அனைத்தும் நாசமாகிவிட்டன; விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம். மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து குறைந்து போனதால், விலை உயர்ந்துள்ளது.வரும் நாட்களில் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும் என்பதால், தக்காளி செடிகளில் பூக்கள் கருகி உதிர்ந்துவிடும்; விளைச்சல் எதிர்பார்த்த அள வுக்கு இருக்காது. இதனால், தக்காளி விலை இறங்குவதற் கான வாய்ப்பு இப்போதைக்கு இல்லை. பிற காய்கறிகளின் விலையும் நிலையாக இல்லை. தினமும் கிலோவுக்கு 3 முதல் 7 ரூபாய் வரை உயர்ந்தும், குறைந்தும் வருகின்றன. இவ்வாறு, தனபால் தெரிவித்தார்.

சில்லரை முறையில் காய்கறி விலை நிலவரம்:
காய்கறி விலை  (கிலோ)
கத்தரி - 40
நாட்டு தக்காளி- 30
ஆப்பிள் தக்காளி - 28
முட்டை கோஸ் - 24
கேரட் - 40
பீன்ஸ் - 40
உ.கிழங்கு-24
பெரியவெங்காயம் - 60
சிறிய வெங்காயம்-36
கொத்தமல்லி - 34
பீட்ரூட்-20
பாகற்காய் -  20
முள்ளங்கி- 20
அரசாணி -16
பூசணி -14
பச்சை மிளகாய் -30
சுரைக்காய் -12

பீர்க்கன்காய் - 24

வெண்டை-24

- நமது நிருபர் -

**மக்காச்சோளத்துக்கு 50 சதவீதம் மானியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,23:37 IST

அன்னூர்: "மக்காச்சோளத்துக்கு 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது' என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தெரிவித்தார். சர்க்கார் சாமக்குளம் வட்டாரத் தில் தோட்டக்கலைத்துறை சார்பில் வட்டார அளவிலான கருத்தரங்கு மற் றும் பயிற்சி நடந்தது. துணை அலுவலர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஜெயராமன் தலைமை வகித்து பேசுகையில்,""தொழிலாளர் பற்றாக்குறையால் விவசாயம் நலிந்து வருகிறது. தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் துறை மானியங்களை விவசாயிகள் தெரிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இடுபொருள் சேமிக்க குடோன் வசதி செய்து தரப்படும்," என்றார். உதவி இயக்குனர் பிரேமலதா பேசுகையில்,""விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அட்டையை பயன்படுத்தி உரிய பயிர்களுக்கு உரிய இடுபொருட் களை எளிதில் பெறலாம். தென்னைக்கு காப்பீடு செய்யப்படுகிறது. மக்காச்சோளத்துக்கு 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு 77083 73099 என்கிற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்," என்றார். பயிர் காப்பீடுக்கான "இப்கோ-டோக்கியோ' ஆலோசகர் ஜானகிராமன் பேசுகையில்,""அதிக மழை, வெள்ளம் மற்றும் பூச்சிகளால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு அரசு மானியம் 50 சதவீதம் வரை பெற முடியும்," என்றார்.சொட்டு நீர் பாசன பிரதிநிதிகள் பேசுகையில்,"" நம் பகுதியில் மழை குறைவு, நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. ""இருக்கும் நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக பரப்பில் விவசாயம் செய்ய சொட்டு நீர் பாசனம் நல்ல முறை. வழக்கமான வரப்பில் தண்ணீர் பாய்ச்சுவதில் 60 சதவீதம் நீரை மிச்சப்படுத்தலாம். சொட்டு நீர் பாசன கருவி அமைப்பவர்களுக்கு 60 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது," என்றனர். வேளாண் அலுவலர் மனோகரன், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க நிர்வாகிகள் உள்பட பலர் பங்கேற்றனர். உதவி வேளாண் அலு வலர் மணி நன்றி தெரிவித்தார்.

**வேளாண் பல்கலை புரிந்துணர்வு ஒப்பந்தம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,23:34 IST

கோவை: தமிழ்நாடு வேளாண் பல்கலை - ஜெர்மனியின் ஹான்னோவர் லெய்பின்ஸ் பல்கலை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான விழா, வேளாண் பல்கலை வளாகத்தில் நடந்தது. பல்கலை பதிவாளர் சுப்பையன் மற்றும் லெய்பின்ஸ் பல்கலை தாவரவியல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பாலசுப்பிரமணியன் ரமணி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசுகையில்,""இரு பல்கலைகளுக்கிடையே ஏற்பட்டுள்ள இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், வேளாண் பல்கலை மாணவ, மாணவியருக்கு பயனுள்ளதாக இருக்கும். வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் லெய்பின்ஸ் பல்கலையுடன் இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வாய்ப்பளிக்கிறது," என்றார். லெய்பின்ஸ் பல்கலை பேராசிரியர் பாலசுப்பிரமணியன் ரமணி பேசுகையில்,""இந்த ஒப்பந்தம் தோட்டக்கலையில் துவங்கி பின், வேளாண்மையின் பிற துறைகளிலும் மேற்கொள்ளப்படும். முனைவர் பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி மற்றும் குறுகிய கால ஆராய்ச்சிப்பணிகள் வரை மேற்கொள்ளலாம்," என்றார்.

**வெங்காயம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,22:38 IST

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் பெல்லாரி வெங்காயம் விலை உயர்ந்தது. கடந்த வாரம் கிலோ ரூ. 40க்கு விற்ற வெங்காயம் நேற்று கிலோ ரூ.80க்கு விற்றது. கிலோ ரூ.20-க்கு விற்ற சிறிய வெங்காயம் நேற்று ரூ.40க்கு விற்றது. வரத்து குறைவே விலை உயர்வுக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மக்காளசோள விதை வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2010,23:11 IST

தேனி : காமாட்சிபுரத்தில் உள்ள சென்டெக்ட் விவசாய அறிவியல் மையம் மற்றும் வாகரை மக்காச்சோளம் ஆராய்ச்சி மையம் மூலம் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு மக்காச்சோளம் வழங்கும் விழா நடந்தது. தேனி விவசாய துணை இயக்குனர் கோவிந்தராஜ் மக்காச்சோள விதைகளை வழங்கினார். ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் ரவிகேசவன், பேராசிரியர் மாரிமுத்து, சின்னமனூர் விவசாய உதவி இயக்குனர் சையதுமுகமது நஹீப் பேசினர்.

ரெங்கனாதபுரம், குப்பிநாயக்கன்பட்டி, ரெங்கசமுத்திரம், நாச்சியார்புரம், கருப்பதேவன்பட்டி, அழகாபுரி, தர்மாபுரி, மூர்த்திநாயக்கன்பட்டி விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *நவம்பர் வரையிலான பதினோரு மாத காலத்தில் முட்டை ஏற்றுமதி 33 சதவீதம் சரிவு*



*எஸ் சுஜாதா*

*கோயம்புத்தூர்*

*நடப்பு 2010–ஆம் ஆண்டின் நவம்பர் வரையிலான பதினோரு மாதங்களில் நாட்டின் முட்டை ஏற்றுமதி 33 சதவீதம்சரிவடைந்துள்ளது.*

*ஏற்றுமதி குறைவு*

*சென்ற ஜூன் மாதத்தில் நாட்டில் பறவைக் காய்ச்சல் நோய் முழுமையாக ஒழிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தியாவில் இருந்து மேற்கு ஆசியா, ஐரோப்பா, கத்தார், குவைத் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் முட்டை இறக்குமதிக்கு இதுவரையில் அனுமதி வழங்கவில்லை என வி.கே.எஸ். ஃபார்ம்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் வி.கே.எஸ்.சிவகுமார் தெரிவித்தார். முன்னணி நிறுவனமான இது முட்டை ஏற்றுமதியில் 70 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளது.*

*நடப்பு ஆண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலத்தில், மாதம் ஒன்றுக்கு*

சராசரியாக 6.25 கோடி முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது, சென்ற ஆண்டில் 9.30 கோடி என்ற அளவில் இருந்தது.

பாதுகாப்பு காரணம்

வளைகுடா நாடுகள், ஆரோக்கிய பாதுகாப்பு காரணங்களுக்காக மட்டுமல்லாமல், அங்கு முட்டை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் கோழிப்பண்ணை உரிமையாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் முட்டை இறக்குமதி மீதான தடையை நீக்காமல் உள்ளன என இந்திய நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பறவைக் காய்ச்சல் பீதிக்கு முன்பு ஒவ்வொரு மாதமும் 100 கண்டெய்னர்களில் (ஒவ்வொன்றிலும் தலா 4.75 லட்சம் முட்டைகள்) மேற்கு ஆசியாவிற்கு முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், தற்போது இது சிறிதளவே குறைந்துள்ளது. இருப்பினும் பக்ரைன் மற்றும் ஓமன் ஆகிய நாடுகள் தற்போது இறக்குமதியை அதிகரிக்க தொடங்கி உள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

உள்நாட்டு சந்தை

மேற்கு ஆப்பிரிக்காவிற்கு ஒவ்வொரு மாதமும் 50 கண்டெய்னர்களில் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், தற்போது முட்டை விலை அதிகமாக உள்ளதால், அந்நாட்டில் தேவைப்பாடு குறைந்துள்ளது. இதனால் மேற்கு ஆப்பிரிக்காவிற்கான முட்டை ஏற்றுமதி மிகவும் குறைந்துள்ளது. முட்டைகள் அடைக்கப்பட்ட பெட்டி (360 முட்டைகள்) ஒன்று சுமார் ரூ.1,000 என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, அங்கு ரூ.100 குறைவாக உள்ளது என பொன்னி கோழிப்பண்ணை நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கே.சிங்கராஜ் தெரிவித்தார்.

## சாகுபடி பரப்பளவு உயர்வு, பருவநிலை சாதகம்இந்தியாவில் கடுகு உற்பத்தி 10–15 சதவீதம் அதிகரிக்கும்



சுதானுகா கோசல்

இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு

சாகுபடி பரப்பளவு உயர்ந்துள்ளதாலும், பருவநிலை சாதகமாக உள்ளதாலும், நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் கடுகு உற்பத்தி 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற 2009–10–ஆம் ஆண்டில் கடுகு உற்பத்தி 64 லட்சம் டன்னாக இருந்தது.

70 லட்சம் டன்

நம் நாட்டில் ஆண்டுதோறும் 55 முதல் 70 லட்சம் டன் வரை கடுகு உற்பத்தியாகிறது. இதில் சுமார் 1.50 லட்சம் டன் விதைக்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. மீதமுள்ள அளவு நேரடி பயன்பாட்டுக்காகவும், எண்ணெய் எடுப்பதற்காகவும் சென்று விடுகிறது. மொத்த கடுகு உற்பத்தியில் ராஜஸ்தான் மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதமாகும். இதற்கு அடுத்தபடியாக பஞ்சாப், அரியானா, மத்தியபிரதேசம், மேற்கு வங்காளம், குஜராத் ஆகிய மாநிலங்களில் கடுகு அதிகம் விளைகிறது.

டிசம்பர் 14–ந் தேதி நிலவரப்படி, ராஜஸ்தான் மாநிலத்தில் 26.66 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கடுகு பயிரிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 22.12 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இம்மாநிலத்தில் மட்டும் 38.61 லட்சம் டன் கடுகு உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏறக்குறைய இதே கால அளவில் அனைத்து மாநிலங்களிலுமாக சுமார் 50 லட்சம் ஹெக்டேரில் கடுகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 7.5 சதவீதம் அதிகமாகும். நம் நாட்டில் ஆண்டுக்கு சுமார் 20 லட்சம் டன் கடுகு எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தியாகும் எண்ணெய் முழுமையாக உள்நாட்டிலேயே பயன்படுத்தப்பட்டு விடுகிறது. கிழக்கு மற்றும் வடக்கு மாநிலங்களில்தான் கடுகு எண்ணெய் பயன்பாடு அதிகமாக உள்ளது. குறிப்பாக கொல்கத்தா, பீகார், ஜார்க்கண்ட், அசாம், திரிபுரா மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் அதிக தேவைப்பாடு உள்ளது. கொரியா போன்ற நாடுகளுக்கு கடுகு புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சமையல் எண்ணெய்

கடுகு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றாலும் சமையல் எண்ணெய் வகைகளுக்கான தேவை அதிகமாக உள்ளதால் கடுகு விலை உயர்ந்தாலும் ஆச்சரியம் கொள்வதற்கில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்தனர். மேலும் ஜனவரி மாதத்தில் பனிப்பொழிவு, குளிர் அதிகமாக இருந்தால் கடுகு பயிர் பாதிக்கப்படும்.

*வடமாநிலங்களில், குறிப்பாக ராஜஸ்தானில், நடப்புச் சந்தையில் ஒரு குவிண்டால் கடுகு விலை ரூ.2,430 என்ற அளவில் உள்ளது. முன்பேர வர்த்தக சந்தைகளில் 2011 ஏப்ரல் 20 டெலிவரிக்கான ஒரு குவிண்டால் கடுகு விலை ரூ.2,847–ஆக உள்ளது.*

## திருவள்ளூர் மாவட்டத்தில் மழையால் சேதமான பயிர்களை கணக்கெடுக்கும் பணி மும்முரம்



திருவள்ளூரை அடுத்த பாண்டூரில் மழையால் சேதமான நெல் பயிரை காணலாம்.

*திருவள்ளூர், டிச. 21–*

*திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்த மழையாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட பயிற்சேதம் பற்றி கணக்கெடுக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.*

*மழையால் பயிர்கள் சேதம்*

*திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்த பலத்த மழையால் சிறு மற்றும் குறு விவசாயிகளின் பாசன வசதி கொண்ட பட்டா நிலங்களில் 50 சதவீதம் மற்றும் அதற்கு மேல் உள்ள சேதங்கள் கணக்கெடுக்கும்பணி தொடங்கியது. குறிப்பிட்ட வட்டங்களில் பயிரிடப்பட்ட அந்த பயிர்கள் கிராம நிர்வாக அலுவலரின் அடங்கல் ஏட்டில் பதிவு செய்திருக்க வேண்டும்.*

*சேதப்பட்டியலை கிராம நிர்வாக அலுவலர் தயாரிக்க வேண்டும். கிராம உதவியாளர் உதவி செய்வார்கள். பட்டியலில் கிராம நிர்வாக அலுவலரும், அந்தப்பகுதி*

வேளாண்மை அலுவலரும் கூட்டாக கையொப்பமிடவேண்டும்.

பல இடங்களில் சேதம்

நெல், கரும்பு, வேர்க்கடலை, மஞ்சள், பயிறு வகைகள், தானியங்கள், தோட்டப்பயிர்கள், சோளம், கம்பு, ராகி, கிழங்கு, காய்கறிகள், பழவகைகள், மசாலா வகைப்பயிர்கள் ஆகியவை திருவள்ளூர் மாவட்டத்தில் பல இடங்களில் பாதிக்கப்பட்டுள்ளன. பாண்டூர், கைவண்டுர், மற்றும் சில இடங்களில் இன்னமும் நெல் பயிர்கள், தண்ணீரில் சாய்ந்து அழுகிவிட்டன. அறுவடை செய்ய முடியாத நெல் கொட்டி முளைக்கவும் ஆரம்பித்துவிட்டன. பாதிக்கப்பட்ட விவசாயிகள் இது பற்றி கலெக்டரிடம் தொடர்ந்து மனு கொடுத்து வருகின்றனர்.